# 16,400 ஈழ அகதிகளை பிரிட்டன் திருப்பி அனுப்பும்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 21 இதழ் 47
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 03 — 04 — 1993

(லண்டன்) பிரிட்டனில் அகதிகளாக உள்ள 16,480 தமிழ் அகதிகளில் 16 400 பேரை பிரிட்டிஷ் அரசு விரை வில் இலங்கைக்கு திருப்பி அனுப்பவுள்ளது. இலங்கைத் பிரிட்டனில் தற்போது 80 தமிழருக்கு மட்டுமே அகதி (4ம் பக்கம் பார்க்க)

## லண்டனில் தமிழர்கள் கண்டனக் கூட்டம்

(லண்டன்) இலங்கைத் தமிழ் அகதிகளை ஒட்டுமொத்தமாக ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளியேற்றுவது என்ற ஏகம னதான முடிவைக் கண்டித்து பிரிட்டிஷ் தமிழர் கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்றை அண்மையில் நடாத்தியுள்ளனர் (4ம் பக்கம் பார்க்க

## புலிகள் – இராணுவம் ஆனையிறவில் மோதல்

(யாழ்ப்பாணம்) புலிகளுக்குமிடையில் நேற்று ஆனையிறவுப் பகுதியில் பலத்த துப்பாக்கிச் சண்டை இராணுவத்துக்கும் விடுதலைப் (4-ம் பக்கம் பார்க்க

# இனப்பிரச்சினை தீர்வுக்கு உதவ

# அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனிடம் கோரிக்கை

## உலகத் தலைவர்களிடமும் வேண்டுகோள்

(மணிலா)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தாமதமின்றி துரித தீர்வொன்றைக் காண்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் உட்பட உலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று அமெரிக்காவில் தலைமையகத்தைக்கொண்டு இயங்கிவரும் உலகத் தமிழ்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் இந்தியப்பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல உலகத்தலைவர்களுக்கும் இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக உலகத் தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் திரு. எஸ் இராஜரத்தினம் நேற்று வெரித்தாஸ் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வங்காள்கடலில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு இந்திய கடற்படையினரால் கொல்லப்பட்ட சம்பவம் பற்றி அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனுக்கும், இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்படும் இன்னல்கள், துயர்கள் குறித்து உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களுக்கும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கும் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

இதேவேளையில் இலங்கைத் தமிழரின் சொல்லொணாத்துயர் பற்றி இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கும், இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கும் தனித்தனியாக மகஜர்கள் அனுப்பியுள் (4-ம் பக்கம் பார்க்க)

## 15 ஆயிரம் சைக்கிள்களுக்கு ரயர் ரியூப்புகள் தருவிப்பு

(யாழ்ப்பாணம்) பதினையாயிரம் சைக்கிள்களுக்குத்தேவையான ரயர், ரியூப்புகளை சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தருவித்து சேர்த்துள்ளது. இம்மாதம் முதல் வாரத் (4ம் பக்கம் பார்க்க)

## ரஷ்யாவிற்கு செல்லும் இலங்கையர் அதிகரிப்பு

(பாஸ்கோ) ரஷ்யாவுக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்கும் இலங்கையர் தொகை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படு (4ம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் முதல் சுதேச மருத்துவ மாணவர் சாகும்வரை உண்ணாவிரதம்

(கொழும்பு) கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவபீட மாணவர்கள் தற்போது மேற்கொண்டுவரும் உண்ணாவிரதப்போராட்டத்தை (4-ம் பக்கம் பார்க்க)

## 1,750 பரல் மண்ணெண்ணை வந்தது

(யாழ்ப்பாணம்) 'நிக்கிரி' கப்பல் 1, 750 பரல் மண்ணெண்ணையுடன் நேற்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலிலிருந்து மண்ணெண்ணை இறக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாயின. (15-ம்

## படையினரின் செயற்பாடுகள் கூர்மையாக அவதானிப்பு

(கொழும்பு) படையினரின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் பற்றி கூர்மையாக அவதானிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் எயர் சீவ் மாஷல் ஏ. டபிள்யூ. பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

படைத்தளபதிகள் மற்றும் படை அதிகாரிகள் இது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

படையிலிருந்து தப்பியோடுபவர்கள் தொகை அதிகரித்து (4-ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிடமிருந்து 1252 கோடி ரூபா கடனுதவி

(கொழும்பு) ஜப்பான் இலங்கைக்கு 1252 கோடி ரூபாவைக்கடனாக வழங்கியுள்ளது.

பல்வேறு அபிவிருத்தித் திட்ட வேலைகளை மேற்கொள்வதற்கு வசதியாகவே இந்தக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மூன்று மாத காலத்தில் 109 தமிழர்கள் பலி

(யாழ்ப்பாணம்) கடந்த மூன்றுமாத காலத்தில் 109 அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவ தாக்குதல்களினால் கொலைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாத ஆரம்பத்திலிருந்துமார்ச் 31ம் திகதி வரையே இந்த 109 தமிழர்களும் கொல்லப்பட்டனர். கிளாலி கடற்பரப்பில் இடம்பெற்ற தாக்குதல்களினால் 67 பேரும், சுப்பர்சொனிக் குண்டு வீச்சினால் 11 பேரும், புக்காரா (4-ம் பக்கம் பார்க்க)

## சபாநாயகரை நீக்குமாறு 42 எம்.எல். ஏ.க்கள் மகஜர்

(சென்னை) தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் திரு. சேடப்பட்டி முத்தையாவை பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்று 42 சட்டப்பேரவை உறுப்பினர்கள் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளதாக தமிழக பத்திரிகைகளில் நேற்று செய்திகள் வெளியிடப்பட்டி (4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி பூநகரி படகுச்சேவை

(யாழ்ப்பாணம்) கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

## ஈழத்தமிழரை திருப்பியனுப்ப ஐரோப்பிய நாடுகள் முயற்சி!

(லண்டன்) இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்குதிருப்பி அனுப்புவதென்று ஐரோப்பிய நாடுகள் ஏகமானதாக ஒரு தீர்மானம் கொண்டுவந்துள்ளன.

அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயம் (யு. என். எச். சி ஆர்) இத்திட்டத்தினை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுள்ளது. திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளை கொழும்பிலும், இலங்கையின் மத்திய பகுதிகளிலும் குடியமர்த்த இந்தப் பகுதிகளை பாதுகாப் 4-ம் பக்கம் பார்க்க)

## சுவிஸிலிருந்து 200 தமிழர் வெளியேற்றப்படுவர்

(பேர்ண்) சுவிஸ் நாட்டிலிருந்து மிக விரைவில் 200 இலங்கைத் தமிழ் அகதிகள் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளன (4ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் யாழ். நகரில் நடைபெறாது

(யாழ்ப்பாணம்) கொழும்பு பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாது இத்தகவலை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் நேற்று யாழ்ப்பாண செயலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

பரீட்சாத்திகள் அனுமதி அட்டைகள் குமண கப்பல் (4-ம் பக்கம் பார்க்க

# வரி விளம்பரம்

## வீட்டிலே சத்துணவு

அன்றாட சத்துணவுத் தேவைக்கு வீட்டுத் தோட்டம் அவற்றின் அமோக விளைச்சலுக்கும் பயிர் பாதுகாப்புக்கும் "நீமியா உரம்" அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. ஒரு கிலோ விலை ரூபா 18/- "மிக்சைவைற்" (எ-3018)

## PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-3023)

## யசோ

சித்திரம் ஆண்டு 11. தவணைப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றுத்தரும். பிரபலமான புத்தகசாலைகளிலே பரபரப்பாக விற்பனையாகின்றது. (சி-4051)

## மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம்சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சயந்திரசாலை, கொக்குவில். (எ-3022)

## சேவை

மக்கள் அபிமானத்தைப் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம் ஸ்ரீலங்கா புத்தகசாலையுடன் இல்லாமல் தனித்தே இயங்குகின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். ஸ்ரீகாந்தா அச்சக வேன், ராஜா தியேட்டர் அருகாமை - யாழ்ப்பாணம். (எ-3025)

## நெல்லிக்காய்

பழுதடைந்த, நன்கு முற்றிய நெல்லிக்காய் நாற்று விதைக்காகத் தேவைப்படுகிறது "மிக்சைவைற்" (எ-3017)

## தேவை

கொர்லிக்ஸ், வீவா, போத்தல்கள் தேவை. றபர் மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd, No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

## திருத்தம்

(யாழ்ப்பாணம்)

'நியாய விலையில் அரிசி, பால்மா' என்ற தலைப்பில் நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான முதற்பக்கச் செய்தியில் குழந்தைகளுக்கான லக்டோஜன் பால்மா 400 கிறாம் 80 ரூபா என்பதே சரியாகும். தவறுதலாக 200 கிறாம் 80 ரூபா என வெளியாகிவிட்டது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செயற்கைக்கால் பாவனையாளர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று 3-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (56)

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு ஏற்பாடு செய்துள்ள சுகவாழ்வு பற்றிய பொது விரிவுரைத் தொடர் இன்று காலை 9 மணி முதல் 12 மணி வரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. (159)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சந்தமடம் ஸ்ரீசிவகுருநாத குரு பீடத்தில் காரைநகர். வேலணை ஆதீனத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்தகுருக்கள் "சைவ ஆகமங்களில் கிரியை விதிகளும், தத்துவ விதிகளும்" என்றதலைப்பில்தொடர்ச்சொற்பொழிவொன்றினை இன்று சனிக்கிழமை நிகழ்த்துகிறார். (சு)

## விற்பனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதுவருடத்தை முன்னிட்டு திருநெல்வேலி வை. எம். எச். ஏ மண்டபத்தில் கடந்த 1-ம் திகதி முதல் 13ம் திகதி வரை மலிவு விலையில் புடவை விற்பனையை ஆரம்பித்துள்ளது.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் றயில்வே கடவை காங்கேசன்துறை வீதியில் சைக்கிளில் தனது தாயாரை ஏற்றிவந்த யுவதி பின்னால் வந்த மோட்டார் சைக்கிளினால் மோதப்பட்டு படுகாயமடைந்து யாழ். பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செல்வி வசந்தி தளையசிங்கம் (10 வயது) என்பவரே மோட்டார் சைக்கிளினால் மோதப்பட்டவராவர். (56)

## இராசி பலன்

03-04-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 21)

ஏகாதசி மு.ப 10-26 வரை, மகம் வைகறை 5-55 வரை, இராகுகாலம் காலை 9-10 முதல் 10-30 வரை, சுபநேரம் காலை 3-10 முதல் 4-40 வரை ஏகாதசி விரதம்.

மேடம்: நற்பெயருக்கு களங்கம், ஞானிகள் சந்திப்பு, குடும்ப பகை.

இடபம்: கெட்ட கனவு, பகை உணர்வு, அலைச்சல்.

மிதுனம்: நண்பர் சந்திப்பு, மனஉறுதி, பணவரவு.

கடகம்: தந்தைவழி இன்னல், மனக்குழப்பம், யோசனை

சிங்கம்: பண ஆதாயம், கடும் உழைப்பு, குடும்பசுகம்

கன்னி: மைத்துனர் தொல்லை, வேலைச்சுமை, வெறுப்பு.

துலாம்: குடும்பத்தில் சுபகாரியம், தொழில் சிறப்பு, புகழ்.

விருச்சிகம்: தொழில் பாராட்டு, விருந்து வைபவம், மனமகிழ்ச்சி.

தனுசு: குள்ளமனிதர் இன்னல். சகோதரபகை, காரிய தடை.

மகரம்: அதிகாரிகள் இன்னல், குடும்பபிரிவு, கடன் சுமை.

கும்பம்: திடீர் யோகம், தொழில் ஏற்றம், பயணம்.

மீனம்: அறிஞர் சந்திப்பு, எதிர்பார்த்த உதவி, தானதர்மம்.

—ஜோஸ்யர்.

## அடியார்களின் அல்லல் தீர்க்கும்
# காசி விநாயகர்

அடியார்களுக்கு முத்தி நல்கும் தலமாகிய காசிப்பதியிலிருந்து எழுந்தருளி வந்து தெல்லிப்பழை நகரிலே, வீணாக்கடவை என்னும் பதியிலே கோயில் கொண்டு ஒன்றரை நூற்றாண்டு காலமாக அடியார்களின் அல்லல் தீர்த்து அருள் பாலித்து வருபவர் காசி விநாயகர்.

கட்டிடங்கள் பழுதுபட்ட காரணத்தால் 1968-ல் பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டதும், திருப்பணி வேலைகள் ஆரம்பமாயின. விநாயக அடியார்கள் பெரு நிதியத்தை உவந்து உதவிய காரணத்தால் மூன்றாவது ஆண்டில் 15-9-1971-ல் ஐந்து யாகம்,

### சிவஸ்ரீ சிவகடாட்ச கணேசலிங்கக் குருக்கள்

நவகுண்டம் ஆதியன அமைக்கப்பெற்று, அதி அற்புதமான முறையில் நயினைக்குரு சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் மூன்றாவது கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ் / தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

## பழைய மாணவர் சங்கம்

# ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டம்

காலம்: 18-04-1993 பிற்பகல் 4-00 மணிக்கு

இடம்: டெ பாடசாலை மண்டபம்.

உறுப்புரிமையுள்ள சகல உறுப்பினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

முக்கிய குறிப்பு:

★ உரிய உறுப்புரிமைச் சந்தாவைச் செலுத்தாதவர்கள் அதனை 15-04-93க்கு முன்னர் செலுத்துமாறும்.

★ புதிய உறுப்பினர்களாக சேர விரும்புபவர்களும் யாப்பு விதிக்கிணங்க விண்ணப்பிக்குமாறும்,

★ பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் ஆவன செய்யுமாறும்

★ தொடர்புகளை, பாடசாலை நேரத்தில் வைத்துக் கொள்ளுமாறும்

அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அநு. வை. நாகராஜன், தலைவர்.
க. தேவராஜா, செயலாளர்.
02-04-93. (சி-4058)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## ப. அழகுமலைச் செட்டியார்

(பி. ஏ. அன் சன்ஸ் உரிமையாளர்)

மறைவு: 27-03-1991 திதி: 03-04-1993

அன்புக்கு உறைவிடமாய்
இல்வாழ்வு நடத்தி
எம்மை எல்லாம் உயர வைத்த
எம் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா இறைவனுடன்
இணையப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 617, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி 4059)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருஷம் பங்குனித் திங்கள் 23ம் நாள் (05-04-93) திங்கட்கிழமை பிற்பகல் 4-30 தொடக்கம் 5-30 வரையுமுள்ள சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| சாந்தன், B. A. (Cey.) | ஜெயந்தி |
| (ஆசிரியர், யா/மானிப்பாய் சோதிகேம்படி வித்தியாலயம்) | (ஆசிரியர், யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்) |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

மானிப்பாய் மருதடி விநாயகர் திருவருள் துணைகொண்டு நல்லூர் திவ்விய ஜீவன சங்ககல்யாணமண்டபத்தில் (சட்டநாதர்கோயில் வீதி) திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 06-04-93 (செவ்வாய்) பிற்பகல் 3-30 மணி அளவில் மணமகனின் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி சி. இராமநாதன், 'மகேஸ்வரா' மகேசன் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

திரு. திருமதி நா. மகாலிங்கம், 101, கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி.

இரு வீட்டார் அழைப்பு. (சி 4049)

# சேவை வழங்க முடியாத காலகட்டத்தில் வரியை உயர்த்தியது சரியல்ல

## யாழ். வரியிறுப்பாளர் சங்க தலைவர் பேட்டி

"மாநகரசபை தனது சேவைகளை மக்களுக்கு வழங்க முடியாத இக்காலகட்டத்தில் வரியை உயர்த்தியது சரியல்ல"

இவ்வாறு யாழ்ப்பாண வரியிறுப்பாளர் சங்கத் தலைவரும் முன்னாள் யாழ். மேயருமான திரு சி. நாகராசா தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆதனங்களை மதிப்பிட்டு சோலைவரி அறவிட வேண்டும் என்பது தவறான கூற்றாகும்.

1983ம் ஆண்டு சொத்துக்களை மீளாய்வு செய்வது பற்றி சபை முடிவு செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. 1983 முதல் 1989ம் ஆண்டு வரை முன்னைய ஆணையாளர் வரி உயர்த்துவது பற்றி எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. இந்தக்காலகட்டத்தில்தான் 1983 யூலையில் தமிழ் ஈழ விடுதலைப் போர் ஆரம்பமானது.

ஆதனத்தின் பெறுமதியை மிகக் கூடுதலாகக் கணித்து வரித் தொகையை உயர்த்திவிட்டு 18 வீத வரியே அறவிடப்படுகின்றது என்று சொல்வதில் எந்தவித அர்த்தமுமில்லை. வரிப்பணத்தின் மூலம் போக்குவரத்துப்படிகள், பிரயாணப்படிகள் என்று கூடுதலான தொகை இன்று செலுத்தப்படுகின்றது என்று அறிகின்றோம்.

சுகாதாரப்பகுதிக்கு அதிகளவு பணம் செலுத்துவதாகக் கூறப்படுகின்றது. வரியிறுப்பாளர் சங்கத்தைப் பொறுத்தமட்டில் இன்று மாநகரசபையின் சுகாதார சேவை ஊழியர்களை வீதிகளில் காண்பதே இல்லை.

மணிசேகரன்

புதிய வீதிகள் அமைக்கவும், வீதிகளைச் செப்பனிடவும் புனர்வாழ்வு அமைச்சின் மூலம் நிதி கிடைக்கப் பெறுகின்றது. மாநகரில் வாழும் அகதிகளுக்கு நிதி உதவி செய்வதற்கு பல அமைப்புக்கள் உள்ளன. அவற்றின் உதவிகள் ஏன் பெறப்படவில்லை. வடிகால்கள் வீதிகள் கூட ஒழுங்காக சுத்தப்படுத்தப்படாமல் இன்று இருக்கின்றன.

1983 முதல் 1989ம் ஆண்டு வரை வரி உயர்வு இல்லாமல் சபையை நிர்வகிக்கக் கூடியதாக இருந்த போது 1993ம் ஆண்டில் மட்டும் வரியை உடனடியாக உயர்த்த வேண்டிய காரணம் என்ன?

எங்கள் சங்கத்தின் ஆலோசனைப்படி ஏராளமான வரியிறுப்பாளர்கள் தங்கள் ஆட்சேபங்களை ஆணையாளருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். வரியிறுப்பாளர்கள் தங்கள் ஆட்சேபங்களை மாவட்ட நீதிமன்றில் கூட நிவாரணம் கேட்க உரிமை உடையவர்கள். ஆனால் இன்று நிவாரணத்தை பெறமுடியாதுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 13வது அரசியல் சாசனத் திருத்தம் பல புதிய சட்ட ஏற்பாடுகளை செய்துள்ளது. இதனால் முன்னைய முடிவுகளை நடைமுறைப்படுத்துவது என்பது ஏற்கக் கூடிய தொன்றல்ல.

மக்களின் ஏகோபித்த ஆட்சேபத்தை ஏற்று வரி அதிகரிப்பை முற்றுமுழுதாக விலக்கிவிடுவது ஆணையாளரின் கடமையாகும். வரி உயர்வு தேவைதானா என்பதை வேளை வரும் போது மக்கள் தீர்மானிக்கட்டும்.

### கடலில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்று குருநகர் கடலில் தவறிவீழ்ந்த ஒருவர் மூழ்கித்து மரணமானார்.

குருநகர் தொடர்மாடியில் வசிக்கும் செபஸ்தியாம்பிள்ளை தவராசா 49-வயது என்பவரே தவறிவிழுந்து மரணமானவராவார்.

இதேவேளையில் தாவடி வடக்கைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவரும் நேற்றுமுன்தினம் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (5-இ)

# இருதய சிகிச்சை நிபுணர் சுட்டுக் கொலை

(புதுடில்லி)

இந்தியாவின் பிரபல இருதய அறுவை சிகிச்சை நிபுணரான அலி அஹமது குரு காஸ்மீர் ஸ்ரீ நகரில் அண்மையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியின் கூட்டம் ஒன்றிற்கு செல்லும் வழியில் இனம் தெரியாத ஆயுதம் தாங்கியோரால் இவர் கடத்திச் செல்லப்பட்டதாகவும் பின்னர் இவர் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ஜே. கே. எல். எவ். இயக்கத்துடன் இவர் நெருக்கமான தொடர்புடையவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# கம்பன் விழாவின் நாளைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழாவின் நாளைய ஞாயிற்றுக் கிழமை நிகழ்ச்சிகள் காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

தலைமையுரையை செல்வி புஷ்பா செல்வநாயகமும் தொடக்கவுரையை கலாநிதி இ. க. கிற்றம்பலமும் நிகழ்த்துவர். இதையடுத்து பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் 'கருத்தரங்கு' நடைபெறும். இதில் திரு. க. சொக்கலிங்கம். திருமதி மனோன்மணி சண்முகதாஸ், திரு. கே. சோமசுந்தரம் திரு இ. ஜெயராஜ் ஆகியோர் பங்குபற்றுவர்.

மாலை நிகழ்ச்சிகள் 4-30 மணிக்கு ஆரம்பமாகும். மங்கள இசையை தொடர்ந்து பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையுரையையும், திரு டொமினிக்ஜீவா தொடக்கவுரையையும் நிகழ்த்துவர்.

இதையடுத்து கவிஞர் இ. முருகையன் தலைமையில் 'வெம்பி விரக்தியுறல் விட்டு விரைந்து போ கம்பனுக்குச் சொல் கவிதைத் தூது'' எனும் தலைப்பில் தூதுக் கவியரங்கம் இடம்பெறும். இதில் செல்வி வே அருந்ததி, திருவாளர்கள் த. ஜெயசீலன், த சிவசங்கர், தா. சிவசிதம்பரம், ஜெ கி ஜெயசீலன், கல்வயல் வே. குமாரசாமி, ச. வே. பஞ்சாட்சரம், நாவண்ணன், காரை. செ. சுந்தரம்பிள்ளை, சோ. பத்மநாதன் ஆகியோர் பங்குபற்றுவர். (இ)

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்-ஊரெழு விளையாட்டுக் கழகங்களின் ஒன்றியத்தினரால் நடாத்தப்படும் காட்சி உதைபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

காங்கேசன்துறை யங் ஸ்ரோர்ஸ் - எதிர் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வி. கழகம், நாவாந்துறை சென். நீக்கிலஸ் எதிர் குருநகர் சென்ரொக்ஸ் வி. கழகம். (இ)

★

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டம் அண்ணா [அராலி] எதிர் மணிப்புரி ஐ வி. க. அம்பாள் (புங்குடுதீவு) எதிர் பண்டிதர் குடியிருப்பு வி. க. (59)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

திரு துரைச்சாமி கிருஷ்ண பிள்ளை (மயிலிட்டி வடக்கு) என்பவரின் அடையாள அட்டை (இல 643411957X) செல்வி கிருஷ்ணபிள்ளை ஜெயமாலா என்பவரால் தொண்டைமானாறு சந்நிதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். (59)

# சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கான இந்த வருடத்திற்குரிய முதல் மூன்று மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை. (65)

# ஈழத்து எழுத்தாளரின் ரூ. 10 லட்சம் பெறுமதியான ஆக்கங்கள் கொள்முதல்

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம், தொண்ணூறு, தொண்ணூற்றொன்றாம் ஆண்டுகளில் பத்து லட்ச ரூபா பெறுமதியான ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களை கொள்முதல் செய்துள்ளது. கடந்த வருடம் துரதிர்ஷ்டவசமாக இதற்கான நிதி கிடைக்காமையால் இம் முயற்சி தடைப்பட்டுள்ளது. இவ்வாண்டு இம்முயற்சியை மேற்கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு மாகாணசபை கோரியுள்ளது."

இவ்வாறு யாழ் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா உள்ளூர் வெளியீட்டாளர் ஊக்குவிப்பு அமைப்பின் கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இந் நிகழ்வு அண்மையில் யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

அமைப்பு தனது நடவடிக்கைகளை உள்ளூராட்சி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்து ஈழத்து நூல்களை கொள்முதல் செய்வதுடன் ஈழத்தில் வெளியாகியுள்ள, வெளிவரும் நூல்களையட்டியல் தயாரித்து அதை பாடசாலைகள், நூலகங்கள், சனசமூக நிலையங்கள் கொள்முதல் செய்ய ஊக்குவிக்கும். (எஸ்-இ)

### தவக்கால நற்சிந்தனை

"இதோ, ஏற்புடைய காலம் இதுவே, இதோ மீட்பின் நாள் இதுவே". (2 கொரிந் 6 2ஆ) இந்நாள் இறைவனுடைய மீட்பைத் தேடும் நாளாகும். அவருடைய மீட்புத்திட்டத்தில் நாம் பங்கு கொள்ள வேண்டின், அதன் முக்கியத்துவத்தை அறிந்து செயற்படவேண்டும் அவர் நம்மிடம் விரும்புவதை நாம் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும். அவர் விரும்பாதவற்றை நாமும் துறக்க வேண்டும்.

ஜோ. தா.


# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலகுவாக தொழில் வாய்ப்பைப்பெற

## ஓர் அரிய சந்தர்ப்பம்!

★ றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங்
சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 6 மாதம்

★ றீவைண்டிங், வயறிங்
வீட்டு மின்வேலை, மோட்டார், ரான்ஸ்போமர் டைனமோ, றீவைண்டிங் செய்தல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 5 மாதம்

★ மோட்டார் மெக்கானிசம்
வாட்டபம், மோட்டார் சைக்கிள் என்பன திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

★ ஏயர் கொண்டிஷனிங் றிப்பியறிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தப்படும்முறை பயிற்சி அளிக்கப்படும்.
காலம்: 5 மாதம்

★ ENGINEERING DRAWING
1-ம் வருட பொறியியற்பீட மாணவர்களுக்காக விசேடமாக பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

பயிற்சியில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்

பயிற்சிகள் ஆரம்பம்:

04-04-1993 (சனி, ஞாயிறு)

05-04-1993 (கிழமை நாட்கள்)

O/L படித்த இருபாலரும் பயிற்சியில் அனுமதிக்கப்படுவர்

விபரங்களுக்கு:

# JAFFNA TECHNICAL INSTITUTE

52/1, Stanly Road, Jaffna.

(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி) (எ-3003)

# யுத்தத்தை நிறுத்தக் கோரி தொழிற்சங்க நடவடிக்கை

## 13 அமைப்புகள் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடரும் யுத்தத்தை நிறுத்துமாறு வலியுறுத்தியும் மற்றும் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தும் 13 தொழிற்சங்கங்கள் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளன.

அரசாங்க லிகிதர் சேவை சங்கம் மற்றும் அரச கூட்டுத்தாபன பொருந்தோட்டம், உள்ளூராட்சி ஆகிய துறைகளைச் சேர்ந்த 13 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளே ஆறு கோரிக்கைகளை முன்வைத்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அரசாங்க லிகிதர் சேவைச் சங்க தலைவர் குணசேன மாகாநாம தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்துக. தமிழர்களின் உரிமையை ஏற்றுக்கொள்க. தேசிய சம்பளத் திட்டத்தை அமைத்தல், குறைந்த சம்பளம் ரூபா 3000/- ஆக்குக. 1980 யூலை வேலை நிறுத்தம் செய்தோருக்கு வேலை நட்டஈடு மற்றும் உரிமைகள் வழங்குக.

சனநாயக தேசிய கல்வி முறை அமைக்குக. தனியார் மயமாக்கலை அகற்றுக. தோட்டத்தொழிலாளரின் வாழ்க்கை நிலையை உயர்த்துக போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே தொழிற்சங்க போராட்டம் நடத்தப்போவதாக மேற்படி தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (இ)

# பம்பாயில் மீண்டும் வெடிமருந்துகள் மீட்பு

(புதுடில்லி)

பம்பாய் பகுதியில் 1900 கிலோ வெடி மருந்துகளை நேற்று பொலிஸார் கைப்பற்றினர்.

பம்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத்தகவல் ஒன்றின் பேரில் பம்பாய் நகரப்பகுதிக்கு அருகில் இருந்த இடம் ஒன்றை பொலிஸார் சுற்றிவளைத்து சோதனையிட்டபோது இந்த சக்தி வாய்ந்த வெடி மருந்துகளை பொலிஸார் கைப்பற்றினர்.

1900 கிலோ கொண்ட இந்த வெடி மருந்துகள் சிறு சிறு பார்சல்களாக கட்டப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (வி-ரி)

# ஒரு நாள் கிரிக்கெட்டில் இலங்கைக்கு 2-வது இடம்

(லண்டன்)

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை கிரிக்கெட் கோஷ்டி உலகில் 2 வது இடத்தை வகிப்பதாக சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் அறிவித்துள்ளது.

புள்ளி விபரங்களின்படி உலகில் கடந்த காலங்களில் நடைபெற்ற ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் மே. இந்தியத் தீவுகள் முதலாவது இடத்தையும், தென் ஆபிரிக்கா 3-வது இடத்தையும், இந்தியா 4-வது இடத்தையும் வகிப்பதாக சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் அறிவித்துள்ளது. (வி-ரி)

### சுவிஸிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கைத் தமிழர்களை அனுப்புவதென முடிவெடுக்கப்பட்டபின் முதற்கட்டமாக சுவிஸ் இவ்வாறு தமிழர்களை முதலில் திருப்பி அனுப்பவுள்ளது.

இத்திட்டம் வெற்றிகரமாக அமையும் பட்சத்தில் மிகுதி அகதிகள் கட்டம் கட்டமாக அனுப்பப்படுவார்கள் என்றும் இதே முறையை பின்பற்றி பிரிட்டனும் தானும் அகதிகளை அனுப்புவதற்காக யு. என். எச். சி. ஆரிடம் தொடர்பு கொண்டுள்ளது. (சி-ரி)

### அடியார்களின்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி தேவஸ்தானத்தின் முதலாவது கொடியேற்றம் 19-4-83 ல் நடைபெற்றது. இதனையும் நயினைக் குருமணியே நிகழ்த்தினார்.

பஞ்சமுக விநாயகரின் கும்பாபிஷேகம் 3-6-87 ல் இடம்பெற்றது. பொது நிதிய மூலம் கட்டப்பெற்ற மேற்படி விநாயகரின் விமானக் கும்பாபிஷேகம் 2-4-90 ல் நிகழ்ந்தது. அடியார்களின் தனிப்பட்ட உபயங்களாகச் செய்விக்கப்பட்ட நான்கு சமயகுரவர்களின் சிலைகளுக்கு 15-3-72ல் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

மேற்படி தேவஸ்தானத்தின் வடபால் அமைந்து தொண்ணூறு அடி நீளங்கொண்ட இசைக்கல்லூரி மண்டபமும் பொது நிதியத்தின் மூலமே கட்டப்பட்டது. இந்த மண்டபத்திலேயே பாலர் ஞானோதய சபையினர் நாற்பத்தாறு ஆண்டுகளாகச் சமய வகுப்புகளையும், இசை வகுப்புகளையும் நூல் வெளியீடுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

# இ. காங்கிரஸ் உறுப்பினர்கள் தமிழக சட்ட பேரவைக்கு வெளியே ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்றும் இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்ததுடன் சபைக்கு வெளியே ஆர்ப்பாட்டமும் செய்தார்கள்.

கூட்டத் தொடரில் கலந்து கொள்ளக்கூடாது என தடை செய்யப்பட்ட மூன்று இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் தடை உத்தரவை மறுபரிசிலனை செய்யும்படி இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையாவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

சம்பந்தப்பட்ட உறுப்பினர் வருத்தம் தெரிவிப்பதுடன் இனிமேல் சபையில் ஒழுங்காக நடப்போம் என்று உறுதியளிக்கவேண்டும் என்று சபை முதல்வர் கேட்டுக் கொண்டார். சபை முதல்வரின் கூற்றை ஏற்றுக் கொள்ளாத இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்ததுடன், சபைக்கு வெளியே ஆர்ப்பாட்டமும் செய்தார்கள். (வி-ரி)

### லண்டனில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'வொண்ஸ் வேத் தமிழர் நலன்புரிச் சங்கம்' ஏற்பாடு செய்த இக்கூட்டத்தில் சுவிஸ், பிரிட்டன் பிரான்ஸ், நோர்வே ஜேர்மனி, அமெரிக்கா, சுவீடன் போன்ற நாடுகளிலிருந்து தமிழர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மேலும் பல பொதுநிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பிரிட்டிஷ் அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்றையும் மேற்படி தமிழர் நலன் புரிச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (கி-ரி)

## செஞ்சிலுவை சங்கம் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுடன் நாளை 4ம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஒரு கலந்துரையாடலும் அன்று பிற்பகல் 2 மணிக்குத் தொண்டர்களுடனான கூட்டம் ஒன்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு உறுப்பினர்கள், தொண்டர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்! முக்கியஸ்தர்கள் ஆகியோர் வருகை தருமாறு அழைக்கப்படுகின்றனர். (இ)


# மணமக்களை வாழ்த்துகின்றோம்

நவாலியூர்

மணமகன் பொ. தவராசா — மணமகள் க. சற்குணதேவி

தம்பதியினரின்

03-04-1993 சனிக்கிழமை

சுவிட்சர்லாந்தில் நடைபெறும் திருமணத்தை இறைகருணையுடன் வாழ்த்துகின்றோம்

இங்ஙனம்

அத்தான்: மா. செல்வராசா (மா ப.நோ.கூ. ச தலைவர்)

அக்கா: செ. தனலட்சுமி

மருமக்கள்: செ. சசிதரன்

செ. சபேசன்

செ. பவித்திரா

(சி4060)


## குமண நாளை வருகிறது

(யாழ்ப்பாணம்)

குமணகப்பல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது

1992ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளும் இக்கப்பலில் எடுத்துவரப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது பேராதனைப்பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளும் இதில் எடுத்துவரப்படவுள்ளன. (159-இ)

### 15 ஆயிரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் வரவுள்ள குமண கப்பல் மூலம் இந்த ரயர், ரியூப்புகள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

### மூன்று மாத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பொம்மர் தாக்குதலினால் 10 பேரும் ஏனையோர் ஷெல் தாக்குதல்களினாலும், துப்பாக்கிச்சூடுகளினாலும் கொல்லப்பட்டனர்.

இதேவேளை அரசின் மருந்துப் பொருள்களின் தடை காரணமாக நோய்களுக்கு சிகிச்சைபெற முடியாமையினால் பலர் இறந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ரி)

### 16,400

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அந்தஸ்து கிடைத்துள்ளதால் இவர்கள் உடனடியாக திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்.

மேற்படி 16,400 தமிழரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப பிரிட்டிஷ் அரசு சகல ஆயத்தங்களையும் செய்து முடித்து விட்டது என துல்லியமாக தெரிய வருவதாக பிரிட்டனில் இயங்கும் 'வொண்ஸ் வேத் தமிழர் நலன்புரிச்சங்கம்' அறிவித்துள்ளது. (சி-ரி)

### ரஷ்யாவிற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் 293 பேர் ரஷ்யா பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் சோவியத் யூனியன் துண்டாடப்பட்டதைத் தொடர்ந்து பெருந்தொகையான இலங்கையர்கள் சட்ட விரோதமாக ரஷ்யாவுக்குள் பிரவேசித்துள்ளார்கள் என்று கூறப்படுகின்றது.

மார்ச் மாதத்தில் மட்டும் மாஸ்கோ பொலிசார் 1139 வெளிநாட்டவர்களைக் கைது செய்துள்ளனர். (சு-ரி)

### சபாநாயகரை

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தன.

இதுகுறித்து நேற்று தமிழ் நாடு சட்டப்பேரவையிலும் பேச்சுக்கள் அடிபட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-ரி)

### இனப்பிரச்சினை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வோம்.

உலகில் எப்பகுதியில் தமிழர் வாழ்ந்தாலும், அவர்கள் எங்கு துயருற்றாலும் அவர்களின் நலன் குறித்துவிரைந்து செயல்படுகிறது உலகத்தமிழ் சங்கம் என்றார். (இ-ரி)

### ஈழத்தமிழரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பான இடமென யு. எச் என். சி. ஆர். சிபார்சு செய்துள்ளதுடன் அகதிகளை பாரமெடுத்து இப்பகுதிகளில் குடியமர்த்தவும் பொறுப்பேற்றுள்ளது.

தற்போது இது தொடர்பான வேலைகள் நடைபெற்றுவருகின்றன. (கி-ரி)

### புலிகள் இராணுவம்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது

நேற்று பகல் 11-15 மணியளவில் ஆனையிறவு முகாமை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த துப்பாக்கி வேட்டுகள் கேட்டுக்கொண்டிருந்ததாகவும் சுமார் 15 நிமிடங்கள் இந்தச் சத்தங்கள் இடைவிடாது கேட்டதாகவும் இதேநேரம் ஆனையிறவு முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதல்களையும் இராணுவத்தினர் மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது. (வி-170-ரி)

### அடுத்த வாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வாரம்முதல் சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டமாக நடத்தமுடிவெடுத்துள்ளனர்.

தாம் முன்வைத்த கோரிக்கைகளை இன்னும் ஒருவாரத்துக்குள் அரசு நிறைவேற்றத் தவறினால் உடனே சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளவிருப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (இ)

### படையினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதுடன் குற்றச் செயல்களிலும் படையினர் ஈடுபட்டு வருவதே இந்த பலத்த கண்காணிப்பிற்குரிய காரணமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் தமது கடமையிலிருந்து இதுவரையும் தப்பியோடியுள்ளதாக அண்மையில் கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன முதற்கலை, முதல் வர்த்தகம், கலைமுதற்தேர்வு, வர்த்தக முதற்தேர்வு, சிறப்புக்கலை ஆகிய பரீட்சைகளுக்கு 2ம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளன. (159 இ)

### பேராதனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் எடுத்துவரப்படவுள்ளன. எனினும் பரீட்சைகள் இங்கு நடைபெறமாட்டாது. இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் பின்னர் இம்முடிவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்பரீட்சை இம்மாதம் 16ம் திகதி முதல் 24ம் திகதிவரை நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (159-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அச்சகத்தார் ஐ. க., யாழ்ப்பாணம் வைமன்வீதி மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Srilanka under licence Number B/10336/B